தினமலர் 30.07.2025

# இலவச மருத்துவ முகாமில் 789 பேருக்கு சிகிச்சை

**வேலாயுதம்பாளையம்:** தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனம், கோவை ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையுடன் இணைந்து நடமாடும் இலவச மருத்துவ முகாமை தினமும் நடத்தி வருகிறது.

அதனை காகித ஆலை நிறுவன மேலாண்மை இயக்குனர் சந்தீப் சக்சேனா கடந்த பிப்ரவரி மாதம் தொடங்கி வைத்தார்.

காகித ஆலையை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள 50 கிராமங்கள் பயன்பெறும் வகையில் இம்மருத்துவ முகாம் நடந்து வருகிறது. 50வது கிராமமாக பொன்னியாக்கவுண்டன்புதுாரில் மருத்துவ முகாம் நடந்தது. இதில் 789 பொதுமக்களுக்கு மருத்துவ ஆலோசனைகளும், தேவைப்பட்டோருக்கு மருந்து மாத்திரைகளும் இலவசமாக வழங்கப்பட்டன.

மேற்கண்ட மருத்துவ முகாம்கள் மூலம் இது வரை 4 ஆயிரத்து 703 பொது மக்கள் பயனடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

http://www.maalaimalar.com Regd. No. TRY/059/2024-2026 RNI.No.42628/85

மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்

MAALAI MALAR

திருச்சி 26-7-2025 (சனிக்கிழமை) 16 பக்கம் ₹ 6 ★ மலர் 48 இதழ் 223

TRICHY 26-7-2025 (SATURDAY) 16 PAGES ₹ 6 VOL: 48 ISSUE: 223

## புகளூர் டி.என்.பி.எல். இலவச மருத்துவ முகாம் மூலம்

# 789 பேருக்கு மருத்துவ உதவி

வேலாயுதம்பாளையம், ஜூலை.26—

கரூர் மாவட்டம் புகளூர் காகிதபுரம் டி.என்.பி.எல். சமுதாய நலப்பணித் திட்டத்தின் கீழ் பொதுமக்களின் உடல்நலனை பேணுவதற்காக தினசரி நடமாடும் இலவச மருத்துவ முகாம் நடைபெற்று வருகிறது.

இந்த முகாமினை கடந்த பிப்ரவரி மாதம் 21—ந் தேதி தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் சந்தீப் சக்சேனா தொடங்கி வைக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இம்முகாமானது கடந்த 24—ந் தேதி உடன் 50—வது கிராமமான பொன்னியாக்கவுண்டன்புதூருடன் 50—ம் மாத மருத்துவ முகாமானது நிறைவு பெற்றது.

மேற்கண்ட மருத்துவ முகாமில் 789 பொதுமக்களுக்கு மருத்துவ ஆலோசனைகளும், தேவைப்பட்டோருக்கு மருந்து மாத்திரைகளும் காகித நிறுவனத்தின் மூலம் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட மருத்துவ முகாம்கள் மூலம் இதுவரை சுமார் 4703 பொதுமக்கள் பயனடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த மருத்துவ முகாம்களை காகித நிறுவனம் தொடர்ந்து நடத்தி வருகிறது.